## வாக்குறுதிகள் இன்னும் நிறைய இருக்கிறது! அதையும் செய்வோம்; செய்யத்தான் போகிறோம்! அதற்காக

# இந்த ஸ்டாலின் மீண்டும் தேவை!

## ‘சன்’ தொலைக்காட்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி!

சென்னை, ஏப்.22-

**“வாக்குறுதிகள் இன்னும் நிறைய இருக்கிறது ; அதையும் செய்வோம்; செய்யத்தான் போகிறோம். அது உறுதி. அதற்காகத்தான் உங்களுக்கு இந்த ஸ்டாலின் மீண்டும் தேவை” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘சன்’ தொலைக்காட்சியின் தலைமைச் செய்தி ஆசிரியர் மு.குணசேகரன் அவர்களுக்கு அளித்த சிறப்புப் பேட்டியின்போது தெரிவித்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சன் தொலைக்காட்சியின் தலைமைச் செய்தி ஆசிரியர் மு.குணசேகரனுக்கு அளித்த நேர்காணல் வருமாறு:-

**நெறியாளர்:** *தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய தேர்தல் பரப்புரை அனல் பறக்க நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் அந்தப் பரப்புரையில் முழு வீச்சில் ஈடுபட்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவருடைய பரப்புரைக்கு மத்தியில் நாம் சந்திக்கிறோம்.*

**நெறியாளர்:** வணக்கம்!

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** வணக்கம்!

### பொதுமக்கள் – மாணவர்கள் உற்சாகத்தோடு வரவேற்றனர்!

**நெறியாளர்:** *200 தொகுதிகளுக்கு மேல் சுற்றி வந்துட்டீர்கள். இது உங்களுக்கு முதல் தேர்தல் பரப்புரை அனுபவமில்லை. தேர்தல் பரப்புரை என்று வந்தால், ஒரு உற்சாகம் உங்களுக்கு வந்துவிடுகிறதே?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பல தேர்தல் பிரச்சாரம் செய்திருக்கிறேன் நான். இந்தத் தேர்தல் பிரச்சாரம் என்பது, நான் முதலமைச்சராக இருந்து, நான் செய்திருக்கின்ற சாதனைகள், என் தலைமையில் அமைந்த ஆட்சியின் மூலமாக செய்திருக்கின்ற திட்டங்கள் எல்லாம், மக்கள் மத்தியில் ரொம்ப எழுச்சியாகச் சேர்ந்திருக்கிறது. அந்த எழுச்சியோடு மக்கள் வரவேற்கிறார்கள். அதனால், ஒரு புத்துணர்ச்சியோடு போனேன்; ரொம்ப மிகச் சிறப்பாக வந்தது. ஏற்கனவே பல முறை போயிருக்கும் போது, அங்கொன்று, இங்கொன்று என்று சில குறைகள் எல்லாம் கூட இருக்கும். ஆனால், இந்த முறை எந்தக் குறைகளும் சொல்லாமல், மக்கள் ஆர்வத்தோடு, பெண்கள் மிக உற்சாகத்தோடு வரவேற்றனர். இளைஞர்கள், மாணவர்கள் அத்தனை பேருமே மிகவும் உற்சாகத்தோடு வரவேற்றனர்.

### பெண்களின் முன்னேற்றத்திற்காகத்தான் முதல் கையெழுத்து – விடியல் பயணம்!

**நெறியாளர்:** *கடந்த தேர்தல்களில் எல்லாம், எதிர்கட்சியாக இருக்கும்போது ஆளுங்கட்சியை விமர்சனம் செய்து தேர்தல் பிரச்சாரம் செய்திருப்பீர்கள். கடந்த கால திமுக அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு செய்த சாதனைகளைச் சொல்லி ஓட்டு கேட்டுருப்பீர்கள். இது தான், முதல் முறையாக ஒரு முதலமைச்சராக உங்கள் சாதனைகளைச் சொல்லி ஓட்டுக் கேட்கிற தேர்தல் பிரச்சாரம். அதில் முதன்மையாக நீங்கள், உங்களுடைய “மிகப்பெரிய சாதனையாக” எதைப் பார்க்கிறீர்கள்?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ‘விடியல் பயணம்’. அதுதான் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன், கோட்டைக்குச் சென்று அந்தக் கோப்பில், கையெழுத்து போட்டதுதான் விடியல் பயணம் தான்.

**நெறியாளர்:** *முதல் நாள், முதல் கையெழுத்தா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** முதல் நாள், முதல் கையெழுத்து. அப்படிப் போடும்பொழுது பெண்களுடைய முன்னேற்றத்தை மனதில் வைத்துக்கொண்டு போட்டேன்.

தந்தை பெரியார், சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கவேண்டும். மக்கள் தொகையில் பாதி அளவு நாட்டில் பெண்கள்தான் இருக்கிறார்கள். அந்தப் பெண்களுக்கு உரிய முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டும் என்பதற்காகப் போராடினார். தலைவர் கலைஞர் அவர்கள், பெண்களுக்கு சொத்துரிமையை சட்டமாக்கிக் கொடுத்தார். அதேபோல மகளிர் சுய உதவிக் குழு என்று, அவர் காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது.



அதே அடிப்படையில்தான், நானும் பின்பற்றி, பெண்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதை ‘டிக்’ செய்தேன்.

அதைத்தான் தேர்தல் வாக்குறுதியில் நாங்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தோம். பிறகு முதலமைச்சரானவுடன், அதிகாரிகள், “இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது கஷ்டமாயிற்றே” என்று சொன்னார்கள். ஏற்கனவே போக்குவரத்துக் கழகம் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

பொதுவாக அண்ணா அவர்கள், போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும் நஷ்டத்தில் இயங்கினாலும்கூட கவலைப்படாதீங்க; ஆனால், அது மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதான் முக்கியம் என்று சொல்லியிருக்கார். அந்த அடிப்படையில்தான், கலைஞருடைய வழியிலே நின்று, நான் அதைச் செயல்படுத்தவேண்டும்; என்ன ஆனாலும், அதை செயல்படுத்த வேண்டும் என்று நினைத்து, முதல் கையெழுத்தை அந்தக் கோப்பில் போட்டேன்.

### மக்கள் அளிக்கும் வரவேற்பால் உற்சாகமாக பிரச்சாரம் செய்கிறேன்!

**நெறியாளர்:** விடியல் பயணம் கோப்பில் கையெழுத்தைப் போட்டீர்கள். அந்தத் திட்டத்தை இன்றைக்குப் பல மாநிலங்களும் அதனைச் செயல்படுத்துகின்ற தன்மையைப் பார்க்கிறோம். தேர்தல் பரப்புரை என்ற ஒன்றை, இன்றைக்கு நீங்கள் 70 வயதைக் கடந்து விட்டீர்கள். காலையில் ஓர் ஊரில் இருக்கிறீர்கள். மாலையில் இரண்டு கூட்டங்களில் பேசுகிறீர்கள். மறுநாள் காலையில் நடைபயிற்சி செல்லும்போது, வாக்கு சேகரிக்கப் போகிறீர்கள். இந்த ‘எனர்ஜி’ உங்களுக்கு எங்கே இருந்து வருகிறது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பொதுவாகவே உடற்பயிற்சி செய்து, சாப்பாட்டில் கட்டுப்பாடு என்பது ஒரு காரணம். அதையும் மீறி, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் மக்கள் வரவேற்பு கொடுப்பதால் எனக்கு அதிகமான உற்சாகம் ஏற்படுகிறது. அதனால், எனக்கு அலுப்பு, சலிப்பு, களிப்பு தெரியவில்லை. நான் தொடர்ந்து பிரச்சாரத்தை மேற்கொள்கிறேன்.

**நெறியாளர்:** இந்தப் பரப்புரையில், உங்களுடைய முதன்மையான எதிரி, அரசியல் ரீதியாக உங்களுக்கு களத்தில் இன்றைக்கு யாரை நீங்கள் உங்களுடைய முதன்மையான எதிரியாகப் பார்க்கிறீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நான் யாரையும் எதிரியாகப் பார்ப்பதில்லை. எல்லோரையும் நண்பர்களாகத்தான் பார்க்கிறேன். எதிரிகளாக இதுவரைக்கும் யாரையும் பார்த்தது இல்லை. அதுதான் என்னுடைய சுபாவம்.

### காலை உணவுத் திட்டத்தால் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!

**நெறியாளர்:** உங்கள் ஆட்சியில், கடந்த அய்ந்தாண்டு கால ஆட்சியில், அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்றால், அது கல்விக்கும், பெண்கள் நலத் திட்டங்களுக்கும்தான். நிகழ்ச்சிகளிலேயும், கல்வி பற்றி அதிகமாகப் பேசுகிறீர்கள். ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கல்விக்கு?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பெருந்தலைவர் காமராஜரை, “கல்வித் தந்தை” என்று சொல்வார்கள். அதுமாதிரி, தலைவர் கலைஞர் அவர்கள், கல்லூரி கல்வியை உயர்த்தினார். அது என்னுடைய மனதில் இருந்தது. ஏனென்றால், ஒருவருக்குக் கல்வி கிடைத்துவிட்டால், அவன் எப்படி இருந்தாலும், அவனுடைய வாழ்க்கையை சமாளித்து விடலாம். அதனால்தான், கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். அதனால்தான் ஒன்றாம் வகுப்பு முதல், அய்ந்தாம் வகுப்பு வரைக்கும் படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு, காலை உணவுத் திட்டம் கொண்டு வந்தோம். காமராஜர் எப்படி மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கினாரோ, எம்.ஜி.ஆர். அதை சத்துணவுத் திட்டம் என்று மாற்றி செய்தாரோ, கலைஞர் வந்து, முட்டையுடன் கூடிய சத்துணவு கொடுத்தாரோ, அது பெரிய விளைவுகளை ஏற்படுத்தியது. அதை யாராலும் மாற்ற முடியவில்லை. அவர்களைத் தொடர்ந்து வருகிறார்கள் எல்லாம், அதை விரிவாக்கம்தான் செய்ய முடிகிறது.

ஒரு நாள் அதுகுறித்து யோசித்தேன்; ஒரு நாள் கலைஞர் நகரில் இருக்கிற ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று, ஆய்வு செய்தேன். அப்பொழுது இரண்டு பிள்ளைகள், மிகவும் சோர்வாக இருந்தார்கள். அவர்களிடம் சென்று, “ஏம்பா, சோர்வாக இருக்கிறீர்கள், சாப்பிடவில்லையா?” என்று கேட்டேன்.

ஆமாம் என்றார்கள்!

அதைக் கேட்டவுடன், எனக்கு அதிர்ச்சியாகி விட்டது!

ஏன் சாப்பிடவில்லை? என்று கேட்டேன்.

எங்களுடைய அம்மா, கூலி வேலைக்குப் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள்.

உடனே என்னுடைய மனதில் ஒரு திட்டம் தோன்றியது. உடனே அலுவலகத்திற்கு வந்து, அதிகாரிகளை அழைத்து, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால், எப்படி இருக்கும்? என்று அதற்குரிய கணக்கீடுகளைச் செய்யச் சொன்னேன்.

அதேபோன்று, அதிகாரிகளும் கணக்கீடுகளைச் செய்து சொன்னார்கள்.

“காலை உணவு திட்ட”த்தைக் கொண்டு வந்தவுடன், இன்றைக்கு மாணவர்களின் வருகையும் அதிகமாகி இருக்கிறது. பள்ளியில் மாணவர்களின் சேர்க்கையும் அதிகமாகி இருக்கிறது.

### பழனிசாமி கூறும் குற்றச்சாட்டு வேடிக்கையானது!

**நெறியாளர்:** இந்தத் தேர்தல் பரப்புரையில், உங்கள் ஆட்சியின் மேல் சொல்கிற மிக முக்கியமான குற்றச்சாட்டு என்பது, தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதுதான்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** வேடிக்கையாக இருக்கிறது. குறிப்பாக, பழனிசாமிதான் இதை அதிகமாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார். அவரும், பல கூட்டங்களுக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறார் பிரச்சாரத்துக்காக. அங்கே பெண்களே வருவது இல்லையா? பாதுகாப்பு இருந்தால் தானே பெண்கள் வர முடியும். அது மாதிரி, எங்கள் கூட்டங்களுக்கும் ஆயிரக்கணக்கில் பெண்கள் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கூட்டத்திற்கு வந்துவிட்டு, நிம்மதியாகப் திரும்பிப் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், கல்லூரிகளுக்குப் போவதற்கும் பெண்கள் அதிகம் போகிறார்கள். அதே மாதிரி 44 சதவிகிதத்திற்குமேல் இன்றைக்கு பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். ஆக, பெண்களுக்கு உரிய பாதுகாப்பு இங்கேதான் இருக்கிறது.

### திட்டமிட்டு பரப்பப்படும் பொய்!

**நெறியாளர்:** பெண்கள் அதிக அளவிற்கு வேலைக்குப் போகிறார்கள்; அதிகம் கல்வி நிறுவனங்களுக்குப் போகிறார்கள். அதனால், பெண்களுக்குப் பாதுகாப்பு என்கிறீர்கள். ஆனால், எதிர்க்கட்சிகளுடைய பரப்புரையாக மட்டுமல்ல எடப்பாடி பழனிசாமி மட்டுமல்ல; பொதுவாகவே பலர், எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல தரப்பினரும், பி.ஜே.பி.யிலிருந்து இருந்து டில்லியில் இருந்து வரக்கூடிய தலைவர்களும் அதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிற ஒன்றாகப் பார்க்கிறோம்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நீங்கள், ஒன்றிய அரசு கொடுத்திருக்கின்ற அறிக்கையை எடுத்துப் பார்த்தீர்களேயானால், பெண்களுக்கு எங்கே பாதுகாப்பு அதிகம் இருக்கிறது என்று பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டில் தான் அதிகமாகப் பாதுகாப்புக் கொடுத்து கொண்டு இருக்கிறார்கள். எந்தவிதமான சட்டம் ஒழுங்கு பிரச்சினை இல்லாமல் இருக்கிறது என்று அவர்களுடைய ஆய்வு அறிக்கையே சொல்கிறது. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு, இதுபோன்று பரப்பப்படுகிறது. அங்கொன்றும், இங்கொன்றும் தனிப்பட்ட முறையில் ஏதாவது ஒரு பிரச்சினை நடந்தால், அதைப் பெரிதாக்குகிறார்கள்.

ஆனால், அந்தப் பிரச்சினையையும் உரிய முறையில் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்கிறோம். உடனே தண்டனை வாங்கிக் கொடுக்கிறோம். அதுவும் நடந்திருக்கிறது நம்முடைய ஆட்சியில்.

இன்றைக்குக் கல்லூரி நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களாக இருந்தாலும் சரி, அதே மாதிரி தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பெண்களாக இருந்தாலும் சரி, எல்லோரும் பாதுகாப்புடன்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், ‘தோழி விடுதி’ என்கிற பெயரில், எல்லா மாவட்டத்திலேயும் அதற்காக விடுதிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டம் பாதி நிறைவடைந்திருக்கிறது; அடுத்து, ஆட்சிக்கு வந்த பிறகு, அந்தத் திட்டம் முழுமையடையும் என்று தேர்தல் அறிக்கையிலேயும் கொடுத்திருக்கிறோம்.

### மக்களின் எழுச்சி சிறப்பாக உள்ளது!

**நெறியாளர்:** நீங்கள் பங்கேற்கின்ற கூட்டங்களில் எழுச்சி எப்படி இருக்கிறது? நேற்றைக்குக்கூட கமல்ஹாசன், பிரேமலதா ஆகியோருடன் ஒரு பேரணி நடத்தினீர்கள். உங்கள் கூட்டங்களில், எழுச்சி எப்படி இருக்கிறது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** மிகச் சிறப்பாக இருக்கிறது. கடந்த தேர்தலின்போது சொன்ன தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். 100-க்கு 85 இல் இருந்து 90% நிறைவேற்றிருக்கிறோம். ஒன்று, இரண்டு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பது, ஒன்றிய அரசினுடைய ஒத்துழைப்பு இல்லாததால்தான். அதனால் தான், 5 சதவிகித வாக்குறுதிகள் நிறைவேற்ற முடியாமல் தடைபட்டு நிற்கிறது.

அதனால், மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. தி.மு.க. சொல்கிற தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அதனால், மக்களிடையே மிகப் பெரிய எழுச்சி உள்ளது.

**நெறியாளர்:** இந்தத் தேர்தல் பரப்புரைக்கு இடையிலேயேயும் கிரிக்கெட் பார்க்கிறீர்கள்; பரப்புரையின் நேரத்தில்கூட கிரிக்கெட் பார்க்கிறீர்கள் என்று ஒரு கமெண்டை கூட எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறாரே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** வண்டியில் பயணம் செய்யும்போது பார்ப்பேன். பிரச்சாரத்துக்குப் போகும்போது, லேப்டாப்பில் பார்ப்பேன். ஒரு ஊரிலிருந்து, இன்னொரு ஊருக்குச் செல்லும் இடைப்பட்ட நேரத்தில், பார்ப்பேனே தவிர, வேறொன்றும் கிடையாது.

### பெண்கள் கல்வி கற்றால் அந்த நாடே முன்னேறும்!

**நெறியாளர்:** பெண்களை மய்யப்படுத்தித் திட்டங்கள் என்பது கடந்த அய்ந்தாண்டு ஆண்டு கால ஆட்சியில் தொடர்ந்து பார்த்தால், பெண்களுக்கான திட்டங்கள் அதிகமாக இருக்கிறது. ஆண்களைவிட, பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பெண்களுக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். ஒரு பெண் கல்வி அறிவில் படித்து முன்னுக்கு வந்தார்கள் என்றால், அந்தக் குடும்பம் மட்டுமல்ல, அந்த நாடே முன்னேறும் என்று படித்திருக்கிறேன். அதனால்,பெண்களுக்குரிய முக்கியத்துவத்தை நாம் கொடுத்து கொண்டிருக்கிறோம்.

**நெறியாளர்:** நீங்கள் அறிவிக்கின்ற ‘இல்லத்தரசித் திட்டம்’ அல்லது ‘உரிமைத் தொகை’ போன்ற வாக்குறுதிகளைப் போட்டி போட்டுக் கொண்டு அ.தி.மு.க.வும் மற்ற கட்சிகளும் தருகிறார்களே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அதை மக்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை. காரணம், தி.மு.க. பொறுத்தவரைக்கும், கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில், ‘கலர் டி.வி.’ கொடுப்போம் என்று சொன்னார். அந்த வாக்குறுதியை முழுதாக நிறைவேற்றினார். தி.மு.க. வாக்குறுதி கொடுத்தால், நிறைவேற்றுவார்கள் என்று மக்களிடம் நம்பிக்கை இருக்கிறது. எடப்பாடி பழனிசாமி சொல்வதையெல்லாம் மக்கள் நம்பத் தயாராக இல்லை.


**நெறியாளர்:** நீங்கள் இபிஎஸ்சை கடுமையாக எதிர்த்துப் பேசுகிறீர்கள். ஆனால், நடிகர் விஜய், உங்களை மிகக் கடுமையாக விமர்சனம் செய்கிறார், இந்தத் தேர்தல் களத்தில். ஆனால், நீங்கள் பதிலே சொல்லாமல் தவிர்க்கிறீர்களே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** இபிஎஸ்சைக் கூட நான் கடுமையாக பேசுவதில்லை. அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதினால், அவர் கேள்விகளைக் கேட்கும்போது, சில பிரச்சினைகளைச் சொல்லும்போது, அதற்குத் தகுந்த பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான், அவரைக் கடுமையாகவோ, விமர்சனமோ அதிகம் சொல்வதில்லை.

அதே மாதிரி, நீங்கள் விஜய்யைப் பற்றி கேட்கிறீர்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், புதிதாக யாராவது கட்சித் தொடங்குகிறவர்கள், அரசியல் செய்யவேண்டும் என்று நினைக்கிறவர்கள் எல்லாம், தி.மு.க.வை விமர்சனம் செய்துதான் பேசுகிற வழக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதை நானும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு தி.மு.க.வை எதிர்த்துப் பேசுகிறவர்களைப்பற்றி நாங்கள் கவலைப்படுவதில்லை.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்து – தி.மு.கழக ஆட்சியில் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம் !



**ஸ்டாலின் தரும் திராவிட மாடல் ஆட்சியின் அரிய சாதனைகளையும், அடிமை பழனிசாமியின் அவல ஆட்சியையும் ஒப்பிட்டுப் பாரீர்! தமிழ்நாட்டின் வளர்ச்சி தடையின்றி முன்னேற, ஸ்டாலின் தொடரட்டும், நம்நாடு வெல்லட்டும் !**